**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**19/2019

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.3வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**<u>நாள் : 19.11.2024</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணகிரி | ஜாதி | : | |
| த/பெயர் | : | வெங்கடாஜலம் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

புல எண்.201/டி 5–லுள்ள 0.25 சென்ட் வாதிக்கு சொந்தமானது என்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். அதில் எந்த அக்கிரமிப்பும் இருந்தாலும் அதை அகற்றி கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். வாதி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். அதுக்குறித்தும் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 25 சென்ட் வாதிக்கு சொந்தமானது என்றும், மீதமுள்ள பகுதியை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்பது குறித்து சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் பிரதிவாதி அனுபவித்து வரும் சொத்துக்கள் தொடர்பாக உள்ள சொத்துக்களின் மூல ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். எந்த மாதம், எந்த வருடம், எந்த தேதியிலுள்ள ஆவணம் என்றால் சரியாக ஞாபகமில்லை. சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி புஷ்பநாதன் வழக்கு சங்கதிகளை எனக்கு சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.20 18:28:08 +0530

District Munsif
Mannargudi.